# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, VANDAVASI.

| | | |
|---|---|---|
| Calendar | : | Case No.c.C.316/2017 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Deposition of Witness for | : | |
| Prosecution | : | |
| Defence | : | அ.சா.3 |
| Name | : | ஜெயலட்சுமி |
| Father’s Name | : | க.பெ.சரவணன் |
| Village | : | வழூர் கிராமம் |
| Taluk | : | . |
| Calling | : | . |
| Religion | : | இந்து |
| Age | : | . 42 |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the year of 15.10.2025.

**5ம் எதிரி இறந்துவிட்டார். 1 முதல் 4, 6 எதிரிகள் ஆஜர்.**

<u>முதல் விசாரணை</u>

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்கிறேன். அ.சா.2 எனது கணவர். எதிரிகளை எனக்கு தெரியும் அவர்கள் என் ஊர்காரர்கள். எதிரிகளில் 3ம் எதிரி ராமு அ.சா.1ன் கணவர். அவர்களுக்குள் குடும்ப பிரச்சனை இருந்துவந்தது. இது சம்மந்தமாக 2013ம் வருடம் அ.சா.1 காவல் நிலையத்தில் மாவட்ட காவல் துறை அதிகாரிமூலம் புகார் கொடுதததாக அறிந்தேன் வேறு விவரம் தெரியாது. இந்த வழக்கு சம்பவத்தில் எனக்கு காயம் எதுவும் ஏற்படவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக பாவிக்க கோரி அனுமதி கோரப்பட்டு அனுமதியுடன் குறுக்கு விசாரணை.**

**சாட்சியை கீழ்கொடுங்காலூர் காவல் நிலைய காவலா் ராஜேஷ் அடையாளம் காட்டி ஆஜா்படுத்தினார். சாட்சியின் ஆதார அடையாள அட்டை சரிபார்க்கப்பட்டது.**

கடந்த 8.10.2013ம் தேதி காலை 7.00 மணிக்கு அ.சா.1 மற்றும் நான் மற்றும் அ.சா.2 ஆகியோர் எதிரிகளுடன் அ.சா.1-க்காக சமாதானம் பேச சென்றபோது எங்கள் மூவரையும் சட்ட முரணாக அடைத்துவிட்டு தாக்கினார்கள் என்று சொன்னால் சரியல்ல.

போலிசார் விசாரிக்கும்போது அவ்வாறு சொல்லிவிட்டு தற்போது அ.சா.1ம், 3ம் எதிரியும் கணவன் மனைவி என்பதாலும் அவர்கள் சமாதானம் ஏற்படுத்திக்கொண்டதாலும் எதிரிகள் எங்கள் ஊர்காரர் என்பதாலும் அவர்களை வழக்கிலிருந்து காப்பாற்ற உண்மையை மறைத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.**

இல்லை.